பூசாகோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை dt.01.09.2021

கல்வி உதவித் தொகை - AIDED - சுற்றறிக்கை - 1

நமது கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்கள் 2021-2022 ஆண்டிற்கு கல்வி உதவித் தொகை பெறுவதற்காக புதியதாக விண்ணப்பிக்க கீழ்காணும் வழிமுறைகளை பின்பற்றவும், தேவையான சான்றுகளை தயார் நிலையில் வைக்கவும் அறிவுறுத்தப்படுகிறார்கள். விண்ணப்பங்கள் வழங்குவது குறித்து பின்னர் சுற்றறிக்கை வாயிலாக தெரிவிக்கப்படும்)

## I CENTRAL SECTOR SCHEME SCHOLARSHIP (Online application)

- இந்த கல்வி உதவுத் தொகை பெற **மே 2021** ல் நடைபெற்ற **பன்னிரண்டாம் வகுப்பு பொது தேர்வில் 80 விழுக்காடுக்கு மேல் மதிப்பெண்** பெற்ற, இளநிலை முதலாமாண்டு பயிலும் மாணவ மாணவியர்கள் மட்டுமே புதியதாக விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள். ஏனையோர் விண்ணப்பிக்க தகுதி இல்லை.

- இதற்குரிய இணையதளம் www.scholarships.gov.in. இந்த இணையதளத்தில் மாணவர்கள் **National Scholarship Portal - ல்** விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட மாட்டாது.

- வட்டாட்சியரால் வழங்கப்பட்ட வருமான சான்று (பெற்றோரின் **ஆண்டு வருமானம் (ரு.எட்டு லட்சத்திற்குள்)** இருக்க வேண்டும். தகுதியுள்ள அனைத்து இன மாணவ மாணவியர்களும் விண்ணப்பிக்கலாம்.

- மாணவ மாணவியர்கள் தங்களது சுய விவரங்கள் மற்றும் மதிப்பெண் விவரங்களை சரியாக பதிவேற்றியதும், அவர்களுக்குரிய **NSP Log in ID மற்றும் Bonafide Certificate** ஆகியவை கிடைக்கும். அதன் பின்னர் மாணவர்கள், அவர்களது **Online Bonafide Certificate** பதிவிறக்கம் செய்து, கல்லூரி முதல்வர் அவர்களின் கையொப்பம் பெற்று, அதனை அவர்களது **Login ID ல் upload** செய்ய வேண்டும்.

- பின்பு இணைய தளத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து சான்றுகளையும் **Attach** செய்த பின்பு **Submit** செய்ய வேண்டும். **Submit** செய்த பின்பு அவர்களது விண்ணப்பத்தினை படியிறக்கம் (Download) செய்து, அதனை தேவையான இணைப்புகளுடன் கல்லூரி அலுவலகத்தில் **Scholarship** பிரிவில் வழங்க வேண்டும்.

- **Scholarship** மாணவ, மாணவியர்களின் பெயரில் இருக்கும் வங்கிக் கணக்கில் அரசால் வரவு வைக்கப்படும். எனவே மாணவ, மாணவியர்களின் பெயரில் வங்கிக் கணக்கு இருக்க வேண்டும்.

- சென்ற ஆண்டிற்குரிய (+2) வருகைப் பதிவு சான்று (Attendance Certificate) தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

**II** சிறுபான்மையினர் கல்வி உதவித் தொகை (MINORITIES **Scholarship**) (Online application)

- இதற்குரிய இணையதளம் www.scholarships.gov.in. இந்த இணையதளத்தில் மாணவர்கள் **National Scholarship Portal - ல்** விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் அலுவலகத்தில் வழங்கப்பட மாட்டாது.

- வட்டாட்சியரால் வழங்கப்பட்ட வருமான சான்று (பெற்றோரின் ஆண்டு வருமானம் ருபாய் இரண்டு லட்சத்திற்குள்) இருக்க வேண்டும். சிறுபான்மையின இன மாணவ மாணவியர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

- மாணவ மாணவியர்கள் தங்களது சுய விவரங்கள் மற்றும் மதிப்பெண் விவரங்களை சரியாக பதிவேற்றியதும், அவர்களுக்குரிய **NSP Log in ID மற்றும் Bonafide Certificate** ஆகியவை கிடைக்கும். அதன் பின்னர் மாணவர்கள், அவர்களது **Online Bonafide Certificate** பதிவிறக்கம் செய்து, கல்லூரி முதல்வர் அவர்களின் கையொப்பம் பெற்று, அதனை அவர்களது **Login ID ல் upload** செய்ய வேண்டும்.

- பின்பு இணைய தளத்தில் கேட்கப்பட்டுள்ள அனைத்து சான்றுகளையும் **Attach** செய்த பின்பு **Submit** செய்ய வேண்டும். **Submit** செய்த பின்பு அவர்களது விண்ணப்பத்தினை படியிறக்கம் (Download) செய்து, அதனை தேவையான இணைப்புகளுடன் கல்லூரி அலுவலகத்தில் **Scholarship** பிரிவில் வழங்க வேண்டும்.

- **Scholarship** மாணவ, மாணவியர்களின் பெயரில் இருக்கும் வங்கிக் கணக்கில் அரசால் வரவு வைக்கப்படும். எனவே மாணவ, மாணவியர்களின் பெயரில் வங்கிக் கணக்கு இருக்க வேண்டும்.

- சென்ற ஆண்டிற்குரிய (+2) வருகைப் பதிவு சான்று (Attendance Certificate) தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

## III BACKWARD CLASS/MOST BACKWARD CLASS AND MINORITIES SCHOLARSHIP (FRESH SCHOLARSHIP)

இந்த கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பங்கள் கல்லூரி அலுவலகம் வழியாக வழங்கப்படும். முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாமாண்டு இளநிலை மற்றும் முதலாம், இரண்டாமாண்டு முதுநிலை பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர் மற்றும் சிறுபான்மையமினர் இன மாணவ மாணவியர்கள் விண்ணப்பிக்கலாம். சென்ற ஆண்டில் விண்ணப்பிக்கவில்லை எனில் இந்த உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம். இவர்கள் கீழ்காணும் சான்றுகளை தயார் நிலையில் வைக்கவும்.

- பெற்றோர் ஆண்டு வருமானம் ரு.2,00,000 க்குள் இருக்க வேண்டும்.
- **Scholarship** மாணவ, மாணவியர்களின் பெயரில் இருக்கும் வங்கிக் கணக்கில் அரசால் வரவு வைக்கப்படும். எனவே மாணவ, மாணவியர்களின் பெயரில் வங்கிக் கணக்கு இருக்க வேண்டும்.

- சென்ற ஆண்டிற்குரிய வருகைப் பதிவு சான்று தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.
- சென்ற ஆண்டின் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அரியர்ஸ் இருக்கும் மாணவர்கள் விண்ணப்பிக்க தகுதியில்லை.

## IV SCHEDULED CASTE/SCHEDULED TRIBE CLASS SCHOLARSHIP (FRESH SCHOLARSHIP)

இந்த கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பங்கள் கல்லூரி அலுவலகம் வழியாக வழங்கப்படும். முதலாம், இரண்டாம் மற்றும் முன்றாமாண்டு இளநிலை மற்றும் முதலாம், இரண்டாமாண்டு முதுநிலை பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் இன மாணவ மாணவியர்கள் விண்ணப்பிக்கலாம். சென்ற ஆண்டில் விண்ணப்பிக்கவில்லை எனில் இந்த உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம். இவர்கள் கீழ்காணும் சான்றுகளை தயார் நிலையில் வைக்கவும்.

- பெற்றோர் ஆண்டு வருமானம் ரு.2,50,000 க்குள் இருக்க வேண்டும்.
- **Scholarship** மாணவ, மாணவியர்களின் பெயரில் இருக்கும் வங்கிக் கணக்கில் அரசால் வரவு வைக்கப்படும். எனவே மாணவ, மாணவியர்களின் பெயரில் வங்கிக் கணக்கு இருக்க வேண்டும்.
- சென்ற ஆண்டிற்குரிய வருகைப் பதிவு சான்று தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.
- சென்ற ஆண்டில் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அரியர்ஸ் இருக்கும் மாணவர்கள் விண்ணப்பிக்க தகுதியில்லை.

> **குறிப்பு:** மாணவ மாணவியர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவைகளில் தகுதியுள்ள ஏதேனும் ஒரு Scholarship-ற்கு மட்டும் விண்ணப்பிக்க அறிவுறுத்தப்படுகிறது. அரசின் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கும் மாணவ மாணவியர்கள் வேறு எந்த உதவித்தொகைக்கும் விண்ணப்பிக்க அனுமதி இல்லை. தேவையான இணைப்புகளுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்டு இருக்கும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். ஏனையது நிராகரிக்கப்படும்.

B 1/9/24

முதல்வர்

PP